Milk White Free Issue;

உ

# மரம் நாட்டு விழா

நூலாக்கம்: க. சி. குலரத்தினம்



மில்க்வைற் தொழிலகம் — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான வேண்டுகோள்

மில்க்வைற் உற்பத்திப் பொருட்களுக்கு நீங்கள் அமோகமாக ஆதரவளித்தால் நாங்கள் இலவச வெளியீடுகளைப் பிரசுரித்து அன்பளிப்புச்செய்ய உதவியாயிருக்கும்.

MWS
MILKWHITE

பார்த்து வாங்குங்கள்

மில்க்வைற்

தயாரிப்புகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம் நாட்டு விழா

## ( திருத்திய மறுபதிப்பு )

எம் மூதாதையர் கொண்டாடி வந்த பழைய விழாக்களில் மரம் நாட்டு விழாவும் ஒன்று. அதனை வன மகோற்சவம் எனவும் கூறுவர். அது நாட்டின் நன்மைக்காகவே நடைபெற்று வந்தது. இயற்கை அன்னை எமக்கீந்துள்ள இணையற்ற செல்வங்களுள் தாவரமும் ஒரு பெரும்பகுதியாகும். தாவரம் என்னும் போது புல், பூண்டு, செடி, கொடி, மரம் ஆகிய சங்கமத்தையே கருதுதல் வேண்டும்.

இயற்கை வளம், சூழல், சுற்றுடல் என்னும் போது முதலில் பசுமையாயுள்ள தாவரங்களையே எவரும் கருதுவர். சூழலை நயக்கும்போது மரஞ்செடி கொடிகளின் தன்மையையும் அவற்றின் உபயோகத்தையும் முதலில் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

எம் மூதாதையர் மரம் நாட்டும் விழாவை நாகரிகச் செயலாகவும், தர்மப் பணியாகவும், பொருளாதார முயற்சியாகவும் கொண்டார்கள். தர்மச் செயல்களுள் நிழல் மரம் நடுதல், கேணி குளம் தோண்டுதல், சுமைதாங்கி அமைத்தல், ஆவுரிஞ்சிக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுதல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், சத்திரங்கள், தங்குமடங்கள் கட்டுதல் முதலியவை சிறந்த பணிகளாகும்.

முற்காலத்து மன்னர் நகர்ப்புறங்களில் உபவனங்கள், தோப்புக்கள் அமைத்ததோடு, நெடுஞ்சாலைகள் வழியே நிரை நிரையாக நிழல்தரும் மரங்களையும் நாட்டினூர்கள். நிழல்தரும் மரங்கள் பயன் தரும் மரங்களாகவும் இருந்தன. வேம்பு, இலுப்பை முதலிய மரங்களை எல்லோரும் விரும்பி நாட்டினூர்கள். மரங்கள் மழையைத் தருவதற்கு உதவியாக இருந்தன.

## கார்த்திகைப் புராணம்

மரம் நாட்டும் அறப்பணியைப் பற்றியும், அதனுல் உண்டாகும் நன்மையைப் பற்றியும், அப்பணியைச் செய்தவர் பெறும் பயனைப் பற்றியும் கார்த்திகைப் புராணம் கூறுகிறது. அரசு, ஆல், வேம்பு, விளா, வில்வம், நெல்லி, புளி, மா, தென்னை ஆகிய ஒன்பது வகையான மரங்களை நாட்டுபவர்களுக்கு நரகவேதனை இல்லை என்பது புராணத்தின் பாடலின் கருத்தாகும்.

நாங்கள் வருடந்தோறும் எத்தனையோ விழாக்களையும், வாரங்களையும், தினங்களையும் கொண்டாடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தைச் செலவிடுகிறோம். இவற்றுள் எமக்கும் எம் சந்ததியினருக்கும் பெரும்பயன் தருவதான விழாவை நாம் கொண்டாடுதலே மேலானதாகும். சுகாதார வாரம், உரிமை வாரம், நூலக வாரம் போல மரம் நாட்டு வாரம் என ஒரு வார காலத்தைக் கொண்டாடுதல் மிக மிக மேலான விழாவாகும். அது மேலான விழாவாயிருப்பதோடு, எம் சிறுவர்களுக்கு நல்ல பழக்கத்தையும் பயிற்சியையும் பண்பையும் வழப்பதாகும் அதனுல் ஒருசில ஆண்டுகளில் அதிக வருவாயையும் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கிடைக்கிறது.

## நவராத்திரி நாட்கள்

ஆண்டுதோறும் நாம் கொண்டாடும் விஜயதசமி என்னும் நவராத்திரி நாள்களில் குறிக்கப்பட்டவேளையில் மரம் நாட்டும் பணியையும் செய்யலாம். இப்பணி எமக்காகவும், பிறருக்காகவும், எம் பிற்சந்ததியாருக்காகவும், நாம் செய்யும் பெருஞ்சேவையாகும்.

எனவே நில வசதியுள்ள வெற்றிடங்களிலும், நெடுஞ்சாலையோரங்களிலும், குளக்கரைகளிலும் கோயில் வீதியோரங்களிலும் பயனுள்ள மரங்களை நாட்டுவோம். தேடுவாரற்றுக்கிடக்கின்ற வெளிகளில் சவுக்கு முதலிய மரங்களை நாட்டினுல் அவை சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களில் எமக்கு வேண்டிய விறகைத்தரும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் விறகுக்காக வேறு விலையுயர்ந்த மரங்களைத் தறிக்க வேண்டிய தேவையும் இருக்கமாட்டாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்து அரசாங்க அதிபர்களாய் இருந்த ஆங்கிலேயர் நாட்டிய நிழல் மரங்கள் பல இன்று தனித் தனி ஆறாயிரம் ஏழாயிரம் ரூபாவாக விலை போகின்றன, அம்மரங்கள் தறிக்கப்படும் இடங்களில் வேம்பு, இலுப்பை முதலிய மரங்களை நாட்டினால் மிகுந்த பயனுண்டாகும்.

வேம்பு, இலுப்பை முதலிய எண்ணெய் தரும் மரங்களை நிறைய வளர்த்தால் தேங்காய் எண்ணெயின் உபயோகத்தைக் குறைக்கலாம். அதனால் நாங்கள் தேங்காய் எண்ணெயை வெளிநாடுகளுக்கு அனுப்பி செலாவணி வளத்தைப் பெறலாம்.

இவ்வாறாக இன்னும் எத்தனையோ வகையாக எமக்கு உபயோகமாகும் மரம் நாட்டும் பணியை நாம் உடனடியாக ஊர்கள் தோறும் பரவும் வகைசெய்தல் வேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேனிற்காலத்தில் வழிநடந்து களைத்தவர்களை நிழலில் ஒதுங்குங்கள் என்று யாருமே கூறுவதில்லை. அவர்கள் தாமாகவே நிழலைத்தேடி இளைப்பாறுவார்கள். பறவைகள் தம் விருப்பம் போல் ஆங்காங்கே கூடுகட்டி இன்பமாகவாழும். இத்தகையவற்ருல் மரம் நாட்டுதல் சிறந்த உயிர்ப்பணியுமாகின்றது.

ஆகவே எங்கள் நாட்டுத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள், உள்ளூர் ஆட்சித் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள். ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் எல்லோரும் மரம் நாட்டும் விழா நடாத்துவதற்குச் சேர முந்துங்கள். நாட்டுக்குத் தங்கள் நற்பணியைச் செய்யத் திரளுங்கள்.

## மரம் நாட்டு விழா

மரம் செடி கொடிகள் வளர்த்திடுவோம்
    மக்கள் வாழ்வு வளர்த்திடுவோம்
நிரந்தர மாகக் காத்திடுவோம்
    நிறைவாழ் வுலகில் வாழ்ந்திடுவோம்.

ஆல் அரசு வேம்பு வளர்த்திடுவோம்
    அழகிய மரங்கள் வளர்த்திடுவோம்
மேலாம் மரங்கள் வளர்த்திடுவோம்
    மேதினி வாழ்வு வளர்த்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெங்கும் மரங்கள் வளர்த்திடுவோம்
உயரிய மரங்கள் வளர்த்திடுவோம்
பாரெங்கும் மரங்கள் வளர்த்திடுவோம்
பலன்தரு மரங்கள் வளர்த்திடுவோம்.

மா பலா கொய்யா வளர்த்திடுவோம்
வாழை தென்னை புளி வளர்த்திடுவோம்
பூகமுங் கரும்பும் வளர்த்திடுவோம்.
புண்ணிய நெல்லி வளர்த்திடுவோம்.

பூஞ்செடி கொடிகள் வளர்த்திடுவோம்
பூமியை அழகாய்ச் செய்திடுவோம்
வாஞ்சையாய் மரங்கள் வளர்த்திடுவோம்
வாழ்வு பெருகச் செய்திடுவோம்.

சாலையில் மரங்கள் வளர்த்திடுவோம்
தண்ணிழல் மரங்கள் வளர்த்திடுவோம்
சோலையும் குளமும் பெருக்கிடுவோம்
சுகவாழ் வுலகில் பெருக்கிடுவோம்.

ஏரி குளங்கள் பெருக்கிடுவோம்
எங்கும் சோலைகள் வளர்த்திடுவோம்
மாரி நீரை வீணாக்காமல்
வற்றாக் குளங்கள் ஆக்கிடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடும் வனமும் பெருக்கிடுவோம்
    கார் மிகப் பொழியச் செய்திடுவோம்
நாடு செழிக்கச் செய்திடுவோம்
    நாதனைத் தொழுது வாழ்த்திடுவோம்.

பரலி. சு. நெல்லையப்பர்

# மரம் செடி வளர்ப்போம்

மரம் செடி கொடியால் மண்ணினில் வாழ்வு
    மனிதர்கள் இதனை உணர்வது அறிவு
அறம் செயல் நல்ல மரம் செடி வளர்ப்பு
    அனைவரும் இதனை உணர்வது சிறப்பு.

உடுத்தும் ஆடை தருவது எதுவோ
    உண்ணும் உணவுகள் தருவது எதுவோ
படுக்கும் பாயல் தருவது எதுவோ
    பலவகை மரங்க்ள் செடி கொடியன்றோ.

எண்ணெயும் விறகும் தருவது எதுவோ
    எரியும் வெளிச்சம் தருவது எதுவோ
மண்ணில் வாழ உதவுவ தெதுவோ
    மரங்கள் செடிகள் கொடிகள் அன்றோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவகை மலர்கள் தருவது எதுவோ
பண்புடை மணங்கள் தருவது எதுவோ
நலமகள் தனது அழகணி போல
நிலவிடு மரங்கள் செடி கொடியன்றோ:

காற்றும் மழையும் தருவது எதுவோ
காசினி வாழ உதவுவ தெதுவோ
போற்றும் பூசைக்கு உதவுவ தெதுவோ
புண்ணிய மரங்கள் செடிகொடி யன்றோ:

வாழ்க மரங்கள் செடி கொடி வாழ்க!
வானம் பொழிந்து மானிலம் வாழ்க!
தாழ்வில் லாத தருமம் வாழ்க!
தானமும் தவமும் தழைத்து வாழ்க!

— புலவர் பாரி

★

**மாணவ மணிகளே!**

**உங்கள் சேவை**

**நாட்டுக்குத் தேவை.**

— பிறந்தநாள் நினைவுக்கு ஒரு மரம் நடுக —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன்

කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ කෙරේ

**READING MAKES A MAN PERFECT**

By Courtesy: MILK WHITE SOAP WORKS, Jaffna (Ceylon)

இப்புத்தகத்தை வாசித்தபின்னர்
தயவுசெய்து பிறருக்குங்
கொடுத்து உதவுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவும் அறப்பணியும்

mws மில்க்வைற்

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் தரும் ஆதரவால் நிறைவேறியவை.

★ பத்து லட்சத்துக்கும் அதிகமான பனம் விதைகள் வரண்ட பகுதிகளில் நாட்டப்பெற்றன.

★ பல்லாயிரக்கணக்கான பயன்தரும் மரங்கள் வீடுகள், கோயில்கள், பாடசாலைகள், பொதுவிடங்கள் தோறும் நாட்டப்பெற்றன.

★ அதிக உணவுப் பயிர்களை உற்பத்தியாக்க வீடுகள் தோறும் விதைகள், கன்றுகள், நாற்றுகள் கொடுக்கப்பெற்றன.

★ நீரைத்தேக்கி நிலத்தை வளஞ்செய்வதற்கு ஊர்கள் தோறும் குளங்கள் துப்புரவாக்கப் பெற்றன.

★ நல்வாழ்வுக்கான துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், செய்தி இதழ்கள் வெளியிடப் பெற்றன.

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org